சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.11.2025
வா.சா.1 – பொன்கொழியாண்டி S/o.சின்னையா அம்பலம்
O.S. No.161/2021
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

வா.சா.ஆ.1 உயிலில் உள்ள விபரங்கள் என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 உயிலில் நான் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 உயிலானது என்னுடைய தகப்பனார் சின்னையா அம்பலத்திற்கு என் அத்தை கணவரான பழனிச்சாமி எழுதிய உயில். அதில் நான் தரப்பினர் அல்ல. மேற்படி உயிலை நான் படித்து பார்த்துள்ளேன். மேற்படி உயில் தன்னுடைய ஆயுளுக்கு பின்னால் தன்னுடைய மனைவியான அபிராமி அம்மாள் ஆயுளுக்குபின்னர் வா.சா.ஆ.1 உயில் நடைமுறைக்கு வரவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பழனிச்சாமி 1977ல் காலமாகிவிட்டார். அபிராமி அம்மாள் என்னுடைய அத்தை 01.09.1993ம் ஆண்டு காலமாகிவிட்டார். அசல் உயில் எங்கிருக்கிறது என்பது பற்றி எனக்கு தெரியாது, என் அப்பா என்னிடம் சொல்லவில்லை. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் பிரச்சினை வந்தது அப்போது தான் உயில் எங்கிருக்கிறது என்ற விபரம் எனக்கு தெரியாமல் போனது, என் அப்பா என்னிடம் சொல்லவில்லை. மேற்படி அசல் உயிலை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1உயிலில் எழுதியவருக்கு கடன் ரூபாய் 1500/- வெண்ணிலைகடனாக இருக்கிறது என்றும் அதை தீர்க்கவேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கடனை என் தந்தை தீர்த்துவிட்டார். நான் அப்போது சிறுவயதாக இருந்தேன். கடன் தீர்க்கப்பட்டதற்கான ஆதாரம் இருக்கிறதா என்றால் இல்லை. உயிலில் கண்ட சொத்தை பொறுத்து என் தகப்பனார் பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

வழக்கு சொத்திற்கு மேற்கே ஜோதிராஜ் என்பவருடைய வீடு இருக்கிறது. வழக்கு சொத்திற்கு கிழக்கில் மோகன் வீடு இருக்கிறது. வழக்கு சொத்திற்கு வடக்கே என்னுடைய வீடு இருக்கிறது. தெற்கே வீதி இருக்கிறது. வழக்கு சொத்தில் பாதை போடப்பட்டதா என்றால் இல்லை. ஆனால் வருவாய்துறையினர் பாதையாக மாற்றிவிட்டார்கள். பிரதிவாதிகள் பிரச்சினை செய்தார்கள். ஆக்கிரமிப்பு செய்த பிறகு தான் பாதையாக மாற்றப்பட்ட விபரம் தெரியவந்தது. வருவாய்துறையில் கிராம நிர்வாக அலுவலர் மூலமாக நடவடிக்கை எடுத்தேன். அந்த மனு நகல் கையில் இல்லை. வழக்கு சொத்து நத்தம் புறம்போக்கு என்றும், நத்தம் சிறப்பு வட்டாட்சியரை தரப்பினராக சேர்க்காததால் தேவையான தரப்பினர்களை சேர்க்காத காரணத்திற்காக இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், 26.11.2020 மற்றும் 11.01.2021 தேதிகளில் 1,2 பிரதிவாதிகள் அத்துமீறி என்னுடைய இடமான வழக்கு சொத்தில் பிரவேசம் செய்வதாக பொய்யாக வழக்குமூலத்தை உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக கீழவளவு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 பட்டா எண்.16.நத்தம் நிலவரி திட்ட துாயசிட்டா, பெயர் செல்லக்கண்ணு மனைவி அபிராமி என்று போடப்பட்டுள்ளதா என்றால் ஆம். மேற்படி அபிராமி அம்மாள் கணவர் பெயர் பழனிச்சாமி தானே என்றால் பழனிச்சாமி தான். ஆனால் செல்லக்கண்ணு என்று வழக்கமாக அழைப்பார்கள் அவரை. அபிராமி அம்மாள் கணவர் பெயர் செல்லக்கண்ணு என்ற பழனிச்சாமி என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 வீட்டுவரிரசீது கதவிலக்கம் 1/116 என்ற வீட்டிற்கான கதவிலக்கம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.10 வரை உள்ள வீட்டுவரி ரசீதுகள் அனைத்தும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தப்படாத

வரிரசீதுகள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்குரிய கதவிலக்கத்தை நான் வழக்கில் குறப்பிட்டு சொல்லாத நிலையில் நான் தாக்கல் செய்திருக்கும் வீட்டுவரிரசீதுகள் ஏற்றுகொள்ளத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. எனக்கு கொங்கம்பட்டியில் 2 வீடுகள் இருந்தன. ஒன்று கூரைவீடு அது இடிந்துவிட்டது. வா.சா.ஆ.11 அபிராமியம்மாள் இறப்பு சான்றிதழ் அதில் கணவர் பெயர் பழனிச்சாமி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17 அபிராமியம்மாள் பெயருக்கு நத்தம் நில வரி திட்டத்தில் வழங்கப்பட்ட பட்டா. வா.சா.ஆ.16 சொத்து மதிப்பீடு வழங்கியிருக்கும் பொறியாளர் திரு.அரவிந்த என்பவர் அரசு அங்கீகாரம் பெற்ற பொறியாளரா என்றால் ஆம். வா.சா.ஆ.16 ஆவணத்தை வழங்கிய பொறியாளரை விசாரித்தால் தான் அதன் உண்மைதன்மை தெரியும் என்றால் சரிதான். நான் கேட்டிருக்கும் செயலுறுத்து கட்டளை பரிகாரமானது அரசாங்கத்தை எதிர்த்து நத்தம் சொத்தில் கோரப்பட்டிருப்பதால் அது நீதிமன்றத்தால் வழங்க இயலாத பரிகாரம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து என்னுடைய அனுபவம் மற்றும் சுவாதீனத்தை ஆவணத்தை தாக்கல் செய்யாத நிலையில் நான் வழக்கு சொத்து என்னுடைய கசொத்து என்ற விளம்புகைபரிகாரம் கேட்டிருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆகவே வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை :

நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழககில் உள்ள வருவாய்துறை ஆவணங்களை பொறுத்தவரை நத்தத்தில் உள்ள பாதை என்று தான் வருவாய் ஆவணங்களில் உள்ளது என்றால் 1982ம் ஆண்டு UDR காலகட்டத்தில் தான் அவ்வாறு பாதையாக மாற்றப்பட்டது எங்களுடைய இடம் ஆகும். 1982க்கு முற்பட்ட காலகட்டத்தில் வழக்கு சொத்து தொடர்பான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை.

மேற்படி UDR காலகட்டத்தில் பாதையாக மாற்றப்பட்டதை தொடர்ந்து வருவாய்துறையினரிடம் ரத்து செய்வதற்காக மனு செய்தேனா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலரை சந்தித்து அது பிரச்சினைக்குரிய இடம் என்று குறிப்பதற்கு ஆவணம் செய்தேன். நானும், 1,2 பிரதிவாதிகளும், பாதையை அனுபவித்து வந்தால் ஆக்கிரமிப்பாளர் என்ற அடிப்படையில் தான் அரசு கருதும் என்றும், ஆகவே முறைப்படி அறிவிப்பு பெற்று ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.11.11 21:39:44 +0530

Sub Judge
Melur